# வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்த பொதுக்கூட்ட அறிக்கை 2025.10.16

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் ஐப்பசி மாதத்திற்கான மாதாந்த பொதுக்கூட்டம் கௌரவ தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் அவர்களின் தலைமையில் 2025.10.16ம் திகதி வியாழக்கிழமை காலை 09.30 மணிக்கு தலைமையலுவலக சபா மண்டபத்தில் ஒரு நிமிட மௌன வணக்கத்துடன் ஆரம்பமானது. அவ்வேளையில் கீழ்காணும் கௌரவ உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் ஆகியோர் சமூகமாகியிருந்தனர்.

1. கௌரவ உறுப்பினர் கந்தசாமி ஜெயரூபமூர்த்தி
2. கௌரவ உறுப்பினர் கந்தசாமி மனோகரராசா
3. கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா
4. கௌரவ உப தவிசாளர் பொன்னுத்துரை தங்கராசா
5. கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர்
6. கௌரவ உறுப்பினர் தேவச்சந்திரன் வஜிந்தன்
7. கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் ரொசாந்தகுமார்
8. கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன்
9. கௌரவ உறுப்பினர் இரத்தினம் அனுஷா
10. கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன்
11. கௌரவ உறுப்பினர் வயிரவன் தங்கவேல்
12. கௌரவ உறுப்பினர் வித்தியா கிருபாகரன்
13. கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன்
14. கௌரவ உறுப்பினர் தர்மலிங்கம் முரளிதரன்
15. கௌரவ உறுப்பினர் பொன்னம்பலம் இராசேந்திரம்
16. கௌரவ உறுப்பினர் துறைராஜா காளிதாஸ்
17. கௌரவ உறுப்பினர் சிறிய அனிக்கிலீஸ் பிறேம்ஸ்ரலன்
18. கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயறாஜ்
19. கௌரவ உறுப்பினர் பாலசுப்பிரமணியம் சிறிதரன்
20. கௌரவ உறுப்பினர் சிவசுப்பிரமணியம் சீத்தா
21. கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன்
22. கௌரவ உறுப்பினர் மேகலா திருஞானசம்பந்தர்
23. கௌரவ உறுப்பினர் பாலச்சந்திரன் லஜிதரன்
24. கௌரவ உறுப்பினர் கருணாகரன் கஜகரன்
25. கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன்
26. கௌரவ உறுப்பினர் சுகீர்த்தனா ரவிச்சந்திரன்
27. கௌரவ உறுப்பினர் சுரேகா கோகுலன்
28. கௌரவ உறுப்பினர் ஜெகதீஸ்வரி சுதர்சன்
29. கௌரவ உறுப்பினர் ஐயாத்துரை மதூசன்
30. கௌரவ உறுப்பினர் முத்தலிப் ரகுநாதன்
31. கௌரவ உறுப்பினர் யோசேவ் மரியதாசன் யோசெவ் இதயராஜ்

- கௌரவ தவிசாளர் தனது தலைமையுரையிலே இன்றைய சபையின் அமர்வுக்கு வருகை தந்துள்ள சபையினுடைய கௌரவ உப தவிசாளர் மற்றும் சபையின் கௌரவ உறுப்பினர்கள், செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் காலை நேர வணக்கத்தினை தெரிவித்து இக்கூட்டமானது சபையின் ஐந்தாவது கூட்டமெனவும் தெரிவித்தார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் எமது பிரதேசத்தினுடைய அபிவிருத்தி செயற்பாடுகள் முக்கியமாக இருந்தாலும் எமது பிரதேசத்தினுடைய காணி விடுவிப்பும் மக்களுடைய காணிகளை பாதுகாப்பது எமது கொள்கை மட்டுமல்ல நாட்டின் ஜனாதிபதி அவர்களின் கொள்கையும் மக்களின் காணிகளை மக்களிடம் வழங்க வேண்டுமென்ற அடிப்படையில் அதற்கான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் என்றும் மக்களுடைய காணிகளை மக்களுக்கு விடுவிப்பதற்கான கொள்கைகளின் அடிப்படையில் இன்றைக்கு எங்களுடைய பிரதேசங்களில் குறிப்பாக கடற்படையினரின் தேவைக்காக கீரிமலையில் காணி சுவீகரிப்பதற்கான முயற்சியானது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றும் அக்காணிகளை ஏற்கனவே விடுவிப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டாலும்

தற்பொழுது கடற்படையினரின் தேவைக்காக 2ஏக்கர் காணி கீரிமலையில் சுவீகரிப்பதற்கான முயற்சி காணிச்சட்டத்திற்கமைவாக அறிவித்தல் தெல்லிப்பளை பிரதேச செயலாளரினால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என சபையின் 2ம் வட்டார கௌரவ உறுப்பினராலும் சபைக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனவும் தவிசாளர் அவர்கள் தெரிவித்தார். ஆகவே மக்களுடைய காணி மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் தீர்மானத்தை நிறைவேற்றி பிரதேச செயலாளருக்கு அனுப்ப வேண்டும் எனவும் தவிசாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

- இன்றைய அமர்வுக்கு எமது சபையின் கௌரவ உறுப்பினர் குலத்துங்கம் வில்வராசா அவர்கள் சுகயீனம் காரணமாக கூட்டத்திற்கு சமூகமளிக்க இயலவில்லை என்றும் தனது விடுமுறையினை அனுமதிக்குமாறு கடித மூலம் அறியத்தந்துள்ளார். குறித்த கௌரவ உறுப்பினர் குலத்துங்கம் வில்வராசா அவர்களின் விடுமுறையினை அனுமதிப்பதற்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் குலத்துங்கம் வில்வராசா அவர்களின் விடுமுறையினை அனுமதிக்கலாமென கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
  - தொடர்ந்து நிகழ்ச்சி நிரல் அடிப்படையில் 18.09.2025 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கையை அங்கீகரிக்குமாறு கௌரவ தவிசாளர் அவர்களினால் கோரப்பட்ட போது கௌரவ உறுப்பினர்களால் பின்வரும் திருத்தங்கள் தெரிவிக்கப்பட்டன

  - கௌரவ உறுப்பினர் பாலசுப்பிரமணியம் சிறிதரன் அவர்கள் (18.09.2025) நடைபெற்ற கூட்ட அறிக்கையில் வலிகாமம் வடக்கில் பெரும்பாலான இடங்களில் திண்மக்கழிவுகள் போடப்பட்டு வருகின்றது அதற்கு பொதுவான இடங்களில் கழிவு சேகரிக்கும் தொட்டிகளை வைத்து ஒரு விழிப்புணர்வினை மேற்கொண்டு அதனை செயற்படுத்த வேண்டும் எனவும் எமது பிரதேசத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளை எல்லா வட்டாரங்களிற்கும் சமனாக பங்கீடு செய்து அபிவிருத்தி செய்வது நன்று என்று தெரிவித்தேன் என்றும் கூறியிருந்தார்.
  - கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்கள் (18.09.2025) நடைபெற்ற கூட்ட அறிக்கையில் பலாலியில் உள்ள இராணுவ வைத்தியசாலையின் கட்டுமான பணிகள் மீண்டும் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது என்று தெரிவித்தேன் என்றும் கூறியிருந்தார்.

  - கௌரவ உறுப்பினர்கள் (18.09.2025) நடைபெற்ற கூட்ட அறிக்கையில் வீதி விளக்குகள் பொருத்துதல் நடவடிக்கையானது வட்டார ரீதியில் சுழற்சி முறையில் பொருத்தப்பட வேண்டுமென தெரிவித்தவிடயம் 18.09.2025 வரைவு அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் அவர்கள் தெரிவித்தார்.

- மேற்குறிப்பிட்ட திருத்தங்களுடன் புரட்டாதி மாதம் 18.09.2025 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கை சரியென கௌரவ உறுப்பினர் தர்மலிங்கம் முரளிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் வழிமொழிய சபையினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- 2025.09.25, 2025.10.10 ம் திகதிகளில் நடைபெற்ற நிதிக்குழுக் கூட்டத்தின் சிபாரிசிற்கமைய கொடுப்பனவுகள் விபரம் சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

| | பெயர் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01 | Sakthy Engineering Thumpalai Road, Point pedro | PSDG-Main -2025 இல் மேற்கொள்ளப்பட்ட Renovation of Bungallow Road Mallakam வேலைக்குரிய இரண்டாவதும் இறுதியுமான கொடுப்பனவு | 628,101.47 |
| 02 | A.V.A.O Engineering Navalar Road,Kodikamam. | சபைநிதி-2025 இல் மேற்கொள்ளப்பட்ட Construction of Two Storeyed Public Library Building at Alaveddy வேலைக்கான முதலாவது பகுதிக்கொடுப்பனவு | 5,560,583.77 |

| | | | |
|---|---|---|---|
| 03 | Deegenics PVT Ltd | Mankiwwa செயலிக்கான புதுப்பித்தல் கட்டணம் செலுத்தும் வரையில் | 250,000.00 |
| 04 | Nalin Information Technologies (PVT) LTD | கணினி 03 கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | 492,060.00 |
| 05 | யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை அச்சகம் | அச்சிட்டுப் பெற்றுக்கொண்ட படிவங்களிற்கான கொடுப்பனவு | 1,696,700.00 |
| 06 | R.K Electricals | கொள்வனவு செய்த வீதி விளக்குகளிற்கான கொடுப்பனவு | 812,000.00 |
| 07 | தலைவர் / செயலாளர் , அளவெட்டி மகாஜனசபை சனசமூக நிலையம் | PSDG நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட Construction of Sathanantha School By lane in Alaveddy வேலைக்குரிய முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு வழங்குதல் | 1,671,750.00 |

***தீர்மான இல :- 01/2025.10.16***

| | பெயர் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01 | Sakthy Engineering Thumpalai Road, Point pedro | PSDG-Main -2025 இல் மேற்கொள்ளப்பட்ட Renovation of Bungallow Road Mallakam வேலைக்குரிய இரண்டாவதும் இறுதியுமான கொடுப்பனவு | 628,101.47 |
| 02 | A.V.A.O Engineering Navalar Road,Kodikamam. | சபைநிதி-2025 இல் மேற்கொள்ளப்பட்ட Construction of Two Storeyed Public Library Building at Alaveddy வேலைக்கான முதலாவது பகுதிக்கொடுப்பனவு | 5,560,583.77 |
| 03 | Deegenics PVT Ltd | Mankiwwa செயலிக்கான புதுப்பித்தல் கட்டணம் செலுத்தும் வரையில் | 250,000.00 |
| 04 | Nalin Information Technologies (PVT) LTD | கணினி 03 கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | 492,060.00 |
| 05 | யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை அச்சகம் | அச்சிட்டுப் பெற்றுக்கொண்ட படிவங்களிற்கான கொடுப்பனவு | 1,696,700.00 |
| 06 | R.K Electricals | கொள்வனவு செய்த வீதி விளக்குகளிற்கான கொடுப்பனவு | 812,000.00 |
| 07 | தலைவர் / செயலாளர் , அளவெட்டி மகாஜனசபை சனசமூக நிலையம் | PSDG நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட Construction of Sathanantha School By lane in Alaveddy வேலைக்குரிய முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு வழங்குதல் | 1,671,750.00 |

*மேற்படி கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உப தவிசாளர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

- ❖ *கௌரவ உறுப்பினர் சந்திரன் தயானி அவர்கள் மு.ப 10.35 மணிக்கு வருகை தந்தார்.*

- பிரதேச சபையின் மூன்றாவது வாக்குப்பணமாற்ற வரவுசெலவுத்திட்டம் சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

| மூன்றாவது வாக்குப்பணமாற்ற வரவு செலவுத்திட்டம் - 2025 அக்ரோபர் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சேமிப்பு | | | | செலவினம் | | |
| இல. | செலவினத் தலைப்பு | விபரம் | தொகை | செலவினத் தலைப்பு | விபரம் | தொகை |
| 1 | 201-01-01-i | சம்பளங்களும் கொடுப்பனவுகளும் (வெளி வாரி) | 1,500,000.00 | 105-05-09 | ஏனையவை (கணக்காய்வுக் கட்டணம், நிகழ்நிலை சேவைகள்,விலைமதிப்பீட்டு திணைக்களக்கட்டணம், வழக்குச்செலவு,காப்புறுதிஇ புகைப்பரிசோதனைவரி, ஆதனவரிதொடர்பானவை) | 600,000.00 |
| | | | | 304-04-02 | வாகனங்கள், இயந்திரங்கள், உபகரணங்களைப் பழுதுபார்த்தல் | 600,000.00 |
| | | | | 504-04-02 | வாகனங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் பழுதுபர்த்தல் | 100,000.00 |
| | | | | 301-01-02 | மேலதிக நேர, விடுமுறை நாட் கொடுப்பனவுகள் | 200,000.00 |
| | மொத்தம் | | 1,500,000.00 | மொத்தம் | | 1,500,000.00 |

**தீர்மான இல :- 02/2025.10.16**

பிரதேச சபையின் மூன்றாவது வாக்குப்பணமாற்ற வரவுசெலவுத்திட்டத்திற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் ஜெகதீஸ்வரி சுதர்சன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் யோசேவ் மரியதாசன் யோசெவ் இதயராஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| மூன்றாவது வாக்குப்பணமாற்ற வரவு செலவுத்திட்டம் - 2025 அக்ரோபர் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சேமிப்பு | | | | செலவினம் | | |
| இல. | செலவினத் தலைப்பு | விபரம் | தொகை | செலவினத் தலைப்பு | விபரம் | தொகை |
| 1 | 201-01-01-i | சம்பளங்களும் கொடுப்பனவுகளும் (வெளி வாரி) | 1,500,000.00 | 105-05-09 | ஏனையவை (கணக்காய்வுக் கட்டணம், நிகழ்நிலை சேவைகள்,விலைமதிப்பீட்டு திணைக்களக்கட்டணம், வழக்குச்செலவு,காப்புறுதிஇ புகைப்பரிசோதனைவரி, ஆதனவரிதொடர்பானவை) | 600,000.00 |
| | | | | 304-04-02 | வாகனங்கள், இயந்திரங்கள், உபகரணங்களைப் பழுதுபார்த்தல் | 600,000.00 |
| | | | | 504-04-02 | வாகனங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் பழுதுபர்த்தல் | 100,000.00 |
| | | | | 301-01-02 | மேலதிக நேர, விடுமுறை நாட் கொடுப்பனவுகள் | 200,000.00 |
| | மொத்தம் | | 1,500,000.00 | மொத்தம் | | 1,500,000.00 |

➢ பிரதேச சபையின் மூன்றாவது உபமானிய வரவுசெலவுத்திட்டம் சபையின் தழுவு அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

| மூன்றாவது உபமானிய வரவு செலவுத்திட்டம் - 2025 - அக்ரோபர் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | | | செலவினம் | | |
| இல. | வருமானத் தலைப்பு | விபரம் | தொகை | செலவினத் தலைப்பு | விபரம் | தொகை |
| 1 | 3-8-81-(1) | மூலதன மானியம் - குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை (PSDG) | 2,299,851.47 | 309-09-09(iv) | பங்களா வீதி புனரமைப்பு (PSDG) | 628,101.47 |
| | | | | 309-09-09-ii(G) | சதானந்தா வீதி புனரமைப்பு (PSDG ) | 1,671,750.00 |
| | | மொத்தம் | **2,299,851.47** | | மொத்தம் | **2,299,851.47** |

**தீர்மான இல :- 03/2025.10.16**
பிரதேச சபையின் மூன்றாவது உபமானிய வரவுசெலவுத்திட்டத்திற்கு தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயறாஜ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் தர்மலிங்கம் முரளிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| மூன்றாவது உபமானிய வரவு செலவுத்திட்டம் - 2025 - அக்ரோபர் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | | | செலவினம் | | |
| இல. | வருமானத் தலைப்பு | விபரம் | தொகை | செலவினத் தலைப்பு | விபரம் | தொகை |
| 1 | 3-8-81-(1) | மூலதன மானியம் - குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை (PSDG) | 2,299,851.47 | 309-09-09(iv) | பங்களா வீதி புனரமைப்பு (PSDG) | 628,101.47 |
| | | | | 309-09-09-ii(G) | சதானந்தா வீதி புனரமைப்பு (PSDG ) | 1,671,750.00 |
| | | மொத்தம் | **2,299,851.47** | | மொத்தம் | **2,299,851.47** |

➢ சபை நிதி – 2025 இன் மூலம் பின்வரும் வேலைகளை அவசர தேவை கருதி சமூக மட்ட அமைப்பிற்கு நேரடி ஒப்பந்தம் வழங்கி நிறைவேற்றுவதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

| இல | வேலைத்திட்டம் | மதிப்பீட்டுத் தொகை | வட்டார இலக்கம் |
|---|---|---|---|
| 01 | கம்பன் சீமா வைரவர் கோவில் வீதி | 2,000,000.00 | 9 |
| 02 | ஆவளை இந்து மயான எரிகொட்டகை புனரமைப்பு – தையிட்டி | 1,450,000.00 | 04 |
| 03 | கொட்டுப்பள்ளம் இந்து மயானம் எரிகொட்டகை புனரமைப்பு - மயிலிட்டித்துறை வடக்கு | 1,450,000.00 | 05 |
| 04 | கும்பலைச் சந்தை புனரமைத்தல் | 1,185,000.00 | 21 |

**தீர்மான இல :- 04/2025.10.16**
சபை நிதி – 2025 இன் மூலம் பின்வரும் வேலைகளை அவசர தேவை கருதி சமூக மட்ட அமைப்பிற்கு நேரடி ஒப்பந்தம் வழங்கி நிறைவேற்றுவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| இல | வேலைத்திட்டம் | மதிப்பீட்டுத் தொகை | வட்டார இலக்கம் |
|---|---|---|---|
| 01 | கம்பன் சீமா வைரவர் கோவில் வீதி | 2,000,000.00 | 9 |
| 02 | ஆவளை இந்து மயான எரிகொட்டகை புனரமைப்பு – தையிட்டி | 1,450,000.00 | 04 |
| 03 | கொட்டுப்பள்ளம் இந்து மயானம் எரிகொட்டகை புனரமைப்பு - மயிலிட்டித்துறை வடக்கு | 1,450,000.00 | 05 |
| 04 | கும்பலைச் சந்தை புனரமைத்தல் | 1,185,000.00 | 21 |

- சபை நிதி – 2025 மற்றும் 2023,2024ம் ஆண்டு அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் மேற்கொள்ளப்படவுள்ள பின்வரும் வேலைத்திட்டங்களிற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வேலைகளினை பகிரங்க கேள்வி கோரல் மூலம் மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்காக சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

| இல | வேலைத்திட்டம் | மதிப்பீட்டுத் தொகை | வட்டார இலக்கம் |
|---|---|---|---|
| 01 | செட்டிச் சோலை வீதியின் 2வது வலதுபக்க ஒழுங்கை புனரமைப்பு – அளவெட்டி வடக்கு | 1,533,000.00 | 12 |
| 02 | நாகரத்தினம் வீதி புனரமைப்பு – தையிட்டி | 2,755,000.00 | 04 |
| 03 | செருக்கப்புலம் வீதி புனரமைப்பு – தெல்லிப்பளை | 5,000,000.00 | 13 |
| 04 | மாவைகலட்டி வீதி புனரமைப்பு | 1,180,000.00 | 10 |
| 05 | வல்லை சங்கானை வீதியின் 3வது இடது கரை வீதி புனரமைப்பு | 1,455,000.00 | 20 |
| 06 | சூளாம்பதி வைரவர் கோவில் வீதி புனரமப்பு - தெல்லிப்பளை | 3,320,000.00 | 13 |
| 07 | மதகிற்கான தடுப்புச்சுவர் அமைத்தல் - புளியடி வீதி, மயிலிட்டி. | 1,800,000.00 | 05 |
| 08 | கொட்டுப்பள்ளம் இந்து மயானம் மதில் அமைத்தல் - மயிலிட்டித்துறை வடக்கு | 2,700,000.00 | 05 |
| 09 | அளவெட்டி மல்லாகம் இந்து மயானம் எரிகொட்டகை புனரமைப்பு | 1,260,000.00 | 21 |

**தீர்மான இல :- 05/2025.10.16**

சபை நிதி – 2025 மற்றும் 2023,2024ம் ஆண்டு அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் மேற்கொள்ளப்படவுள்ள பின்வரும் வேலைத்திட்டங்களிற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வேலைகளினை பகிரங்க கேள்வி கோரல் மூலம் மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் வயிரவன் தங்கவேல் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| இல | வேலைத்திட்டம் | மதிப்பீட்டுத் தொகை | வட்டார இலக்கம் |
|---|---|---|---|
| 01 | செட்டிச் சோலை வீதியின் 2வது வலதுபக்க ஒழுங்கை புனரமைப்பு – அளவெட்டி வடக்கு | 1,533,000.00 | 12 |
| 02 | நாகரத்தினம் வீதி புனரமைப்பு – தையிட்டி | 2,755,000.00 | 04 |
| 03 | செருக்கப்புலம் வீதி புனரமைப்பு – தெல்லிப்பளை | 5,000,000.00 | 13 |
| 04 | மாவைகலட்டி வீதி புனரமைப்பு | 1,180,000.00 | 10 |
| 05 | வல்லை சங்கானை வீதியின் 3வது இடது கரை வீதி புனரமைப்பு | 1,455,000.00 | 20 |
| 06 | சூளாம்பதி வைரவர் கோவில் வீதி புனரமப்பு - தெல்லிப்பளை | 3,320,000.00 | 13 |
| 07 | மதகிற்கான தடுப்புச்சுவர் அமைத்தல் - புளியடி வீதி, மயிலிட்டி. | 1,800,000.00 | 05 |
| 08 | கொட்டுப்பள்ளம் இந்து மயானம் மதில் அமைத்தல் - மயிலிட்டித்துறை வடக்கு | 2,700,000.00 | 05 |

| | | | |
|---|---|---|---|
| *09* | அளவெட்டி மல்லாகம் இந்து மயானம் எரிகொட்டகை புனரமைப்பு | 1,260,000.00 | *21* |

- வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மகிழூந்து சங்கம் தங்களுக்கான வாடகை மகிழூந்து தரிப்பிடம் அமைப்பதற்காக பொருத்தமான இடத்தினை வழங்குவதற்கு கோரிக்கை சமர்ப்பித்துள்ளார்கள். குறித்த கோரிக்கையானது சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

***தீர்மான இல :- 06/2025.10.16***

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மகிழூந்து சங்கத்திற்கு வாடகை மகிழூந்து தரிப்பிடம் அமைப்பதற்காக பொருத்தமான இடத்தினை வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- சிவனருள் ஹோப் (ஹெரண்டி) லிமிட்டட் நிறுவனத்தினர் பசுக்களின் உணவுத்தேவைக்கு புற்செய்கை நிலம் ஒதுக்கீடு செய்வதற்கான கோரிக்கை சமர்ப்பித்துள்ளார்கள். சீராவளை இந்து மயான ஒரு பகுதியினை மதிப்பீட்டு வாடகை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

***தீர்மான இல :- 07/2025.10.16***

சிவனருள் ஹோப் (ஹெரண்டி) லிமிட்டட் நிறுவனத்தினர் பசுக்களின் உணவுத்தேவைக்கு புற்செய்கை நிலம் ஒதுக்கீடு செய்வதற்கான கோரிக்கை சமர்ப்பித்துள்ளார்கள். சீராவளை இந்து மயான ஒரு பகுதியினை விலைமதிப்பீட்டு திணைக்களம் மதிப்பீட்டிற்கமைய வாடகை ஒப்பந்த அடிப்டையில் வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தர்மலிங்கம் முரளிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- காங்கேசன்துறை சந்தையின் முன்னால் உள்ள உணவகத்திற்கு வரும் வாகனங்கள் தரித்து நிற்பதற்கு ஏற்ற இடமொன்றினை தந்துதவுமாறு திரு.மீராறகீம் அப்துல்அசீஸ் என்பவர் கோரிக்கை சமர்ப்பித்துள்ளார். மாதாந்தம் ரூபா 30,000.00 வாடகை அடிப்படையில் ஒப்பந்த்தினை மேற்கொண்டு காங்கேசன்துறை சந்தையின் ஒரு பகுதியினை வழங்குவதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

***தீர்மான இல :- 08/2025.10.16***

காங்கேசன்துறை சந்தையின் முன்னால் உள்ள உணவகத்திற்கு வரும் வாகனங்கள் தரித்து நிற்பதற்கு இடத்தினை வழங்குமாறு திரு.மீராறகீம் அப்துல்அசீஸ் என்பவரின் கோரிக்கைக்கு அமைவாக மாதாந்தம் ரூபா 30,000.00 வாடகை ஒப்பந்த அடிப்படையில் காங்கேசன்துறை சந்தையின் ஒரு பகுதியினை வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் முன்மொழிய கௌரவ உப தவிசாளர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- அளவெட்டி மேற்கில் வசிக்கும் அருட்செல்வம் அருந்தவம் என்பவர் மலைவேம்படி சந்தையில் காணப்படும் தற்காலிக கடையினை நாளாந்த அடிப்படையில் மரக்கறி வியாபாரம் செய்வதற்கு தந்துதவுமாறு கோரிக்கை கடிதம் சமர்ப்பித்துள்ளார். குறித்த விடயம் சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

***தீர்மான இல :- 09/2025.10.16***

அளவெட்டி மேற்கில் வசிக்கும் அருட்செல்வம் அருந்தவம் என்பவர் மரக்கறி வியாபாரம் செய்வதற்கு மலைவேம்படி சந்தையில் காணப்படும் தற்காலிக கடையினை நாளாந்த அடிப்படையில் வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் யோசேவ் மரியதாசன் யோசெவ் இதயராஜ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் தர்மலிங்கம் முரளிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கீரிமலை சந்தையில் 2கடைகள் பகுதியளவில் கண்ணாடியினால் அடைக்கப்பட்டு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. மூன்றாவதாக உள்ள பகுதி பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றது. கீரிமலையில் வசிப்பவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக குறித்த பகுதியினை சீர்செய்து வழங்கியுதவுமாறு கோரிக்கை சமர்ப்பித்துள்ளார்கள். அதனை சீர்செய்து விலைமதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டிற்கமைய மதிப்பீடு செய்து மாதாந்த

வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 10/2025.10.16**
கீரிமலையில் வசிப்பவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக கீரிமலை சந்தையில் மூன்றாவதாக உள்ள பகுதியினை சீர்செய்து விலைமதிப்பீட்டு திணைக்கள மதிப்பீட்டிற்கமைய மதிப்பீடு செய்து மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தர்மலிங்கம் முரளிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கும்பலை இறைச்சிக்கடை தற்பொழுது சந்தைக்குள் இயங்குவதால் பழைய இறைச்சிக்கடையினை திருத்தி வாடகையினை மதிப்பீடு செய்து வழங்குவதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 11/2025.10.16**
கும்பலை இறைச்சிக்கடை தற்பொழுது சந்தைக்குள் இயங்குவதால் பழைய இறைச்சிக்கடையினை திருத்தி வாடகையினை மதிப்பீடு செய்து வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் யோசேவ் மரியதாசன் யோசெவ் இதயராஜ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயறாஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- தெல்லிப்பளையில் வசிக்கும் முருகேசு விஜயகுமார் மல்லாகம் சந்தையிலுள்ள தற்காலிக 03 கடைகளினை (மாதாந்தம் 2,500.00 X 3) ரூபா 7500.00 வாடகைக்கு தந்துதவுமாறு கோரிக்கை கடிதம் சமர்ப்பித்துள்ளார். குறித்த விடயம் சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

கௌரவ உறுப்பினர் கருணாகரன் கஜகரன் அவர்கள் மல்லாகம் சந்தையிலுள்ள தற்காலிக கடைகள் நாளாந்தம் இயங்குவதில்லை என்றும் அதனை ஒழுங்காக இயங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் கருணாகரன் கஜகரன் அவர்கள் சகோதர இனத்தவர்கள் வெள்ளிக்கிழமைகளில் எமது பிரதேசத்திற்கு வருகை தந்து வெள்ளிக்கிழமை,சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வியாபாரங்களினை மேற்கொண்டு செல்கிறார்கள். ஆனால் சபையினால் வரிகள் அறவீடு செய்யப்படுவதில்லை என்றும் தெரிவித்தார்.

கௌரவ தவிசாளர் அவர்கள் வருமானப்பரிசோதகர்களுக்கு குறித்த விடயம் தொடர்பாக அறிவித்தல்கள் வழங்கி அவர்கள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் குறித்த வியாபாரங்களினை கண்காணிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

**தீர்மான இல :- 12/2025.10.16**
தெல்லிப்பளையில் வசிக்கும் முருகேசு விஜயகுமார் அவர்களின் கோரிக்கைக்கு அமைவாக மல்லாகம் சந்தையிலுள்ள 03 தற்காலிக கடைகளினை (மாதாந்தம் 2,500.00 X 3) ரூபா 7500.00 வாடகைக்கு வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- குரும்பசிட்டி மேற்கினைச் சேர்ந்த பு. கயனி என்பவர் தையல் கடையினை நடாத்துவதற்கு குரும்பசிட்டி சந்தையிலுள்ள கடையினை பயன்படுத்த அனுமதி கோரியுள்ளார். குறித்த விடயம் சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.
    - கௌரவ உறுப்பினர் ஜெகதீஸ்வரி சுதர்சன் அவர்கள் குரும்பசிட்டி சந்தையில் இறைச்சிக்கடை இயங்குவதாகவும் ஆனால் அங்கு தூய்மையில்லாமல் பறவைகளின் எச்சங்கள் இருப்பதாகவும் அதனை கண்காணிக்குமாறு தெரிவித்தார்.

**தீர்மான இல :- 13/2025.10.16**
குரும்பசிட்டி மேற்கினைச் சேர்ந்த பு.கயனி என்பவர் தையல் கடையினை நடாத்துவதற்கு குரும்பசிட்டி சந்தையிலுள்ள கடையினை பயன்படுத்த அனுமதி வழங்குவதென கௌரவ உப தவிசாளர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- வலிகாமம் வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் நடைபெறும் தனியார் கல்வி நிறுவனங்களின் வகுப்புகளையும் மற்றும் குழு வகுப்புக்களையும் வெள்ளிக்கிழமைகளில் முழுமையாக நிறுத்துவதற்கும் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மதியம் 12.00 மணி வரை 9ம் வகுப்பிற்கு உட்பட்ட வகுப்புக்களை நிறுத்துவது தொடர்பாக தீர்மானத்தினை மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.
    - கௌரவ தவிசாளர் அவர்கள் தற்போது பெற்றோர்கள் தனியார் கல்வி நிறுவனங்களினை நாடுவதனால் பிள்ளைகளை சுயமாக கற்கவிடுவதில்லை எனவும் பிள்ளைகள் ஆலயங்களுக்கு செல்வதுமில்லை எனத் தெரிவித்தார்.
    - கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் வகுப்புக்களை நிறுத்துவது சரி ஆனால் அந்த மாணவர்கள் அறநெறிக்குத்தான் செல்லுகிறார்கள் என்று எவ்வாறு உறுதிசெய்வது என கேட்டார்.

**தீர்மான இல :- 14/2025.10.16**
வலிகாமம் வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் நடைபெறும் தனியார் கல்வி நிறுவன வகுப்புக்கள் மற்றும் குழு வகுப்புக்களை வெள்ளிக்கிழமைகளில் முழுமையாக நிறுத்துவதற்கும் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மதியம் 12.00 மணி வரை 9ம் வகுப்பிற்கு உட்பட்ட வகுப்புக்களை நிறுத்துவதற்கும் அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கருணாகரன் கஜகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்கள் தையிட்டி திஸ்ஸ விகாரையில் கட்டடங்கள் கட்டுவதற்கான செங்கற்கள் கொண்டு செல்லப்படுகின்றது எனவும் இது தொடர்பில் கௌரவ தவிசாளர் அவர்களுக்கு தொலைபேசி மூலம் தெரிவித்திருந்தேன்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் தான் அங்கு சென்று பார்வையிட்ட போது அங்கு புதிய கட்டடங்கள் எதுவும் கட்டப்படவில்லை என்றும் முன்பு கட்டப்பட்ட விகாரையோடு பூங்கன்று வைப்பதற்கான தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்கள் விகாரையோடு புதிய கட்டங்கள் அதாவது பூந்தொட்டிக்கான கட்டடங்கள் அமைப்பதால் கட்டடத்தின் அளவுகள் கூடிக்கொண்டே செல்கின்றன என்றும் தெரிவித்தார்.
    - கௌரவ தவிசாளர் அவர்கள் தையிட்டி திஸ்ஸ விகாரை தொடர்பாக சபையால் சட்டநடவடிக்கை மேற்கொள்வதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது தீர்மானத்தின் அடிப்படையில் புதிய கட்டங்கள் அமைப்பது நிறுத்தப்பட வேண்டுமென தேரருக்கு என்னால் கடிதம் வழங்கப்பட்டதென்றும் தெரிவித்தார்.
    - கௌரவ தவிசாளர் அவர்களால் அகில இலங்கை பௌத்த மகா சம்மேளத்தினால் தையிட்டி விகாரை சம்பந்தமான கடிதம் வந்ததாகவும் அது தொடர்பாக சபையில் ஆலோசித்து தீர்மானம் நிறைவேற்றுவோம் எனத் தெரிவித்தார்.
    - கௌரவ தவிசாளர் அவர்கள் நாங்கள் அமைச்சரவைக்கு இது சம்பந்தமாக தீர்மானத்தினை நிறைவேற்றி அனுப்புவோம் என்றும் அதற்கு 14 நாட்களுக்குள் பதில் கிடைக்காவிட்டால் முன்பு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் சட்டநடவடிக்கைக்கு செல்வோம் எனத் தெரிவித்தார்.
    - கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் அவர்கள் தீர்மானம் எடுத்து 14 நாட்களுக்குள் பதில் கிடைக்கப்பெறாதவிடத்து சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.
    - கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் 14 நாட்களின் பின் ஒரு விசேட கூட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்தி அதற்குரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு குழு அமைத்து அதனை கண்காணிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் எனத் தெரிவித்தார்.
    - கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் 14 நாட்களுக்குள் பதில் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் ஒரு விசேட கூட்டத்தினை ஒழுங்குபடுத்தி அதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.
    - கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்கள் 14 நாட்களின் பின் ஒரு விசேட கூட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்தி அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.
    - கௌரவ தவிசாளர் அவர்கள் NCG பஸ் உரிமையாளருக்கு கடிதம் அனுப்பி அவ் இடத்தில் பஸ் நிறுத்தப்படுவதில்லை எனத் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் பஸ் இப்பொழுது முன் பக்கத்தில் நிறுத்தாமல் விகாரைக்கு பின்பக்கமாகவும் பிக்குமாரின் விடுதிக்கும் இடையில் நிறுத்தியிருப்பதாகவும் தெரிவித்தார்.

**தீர்மான இல :- 15/2025.10.16**

2025.07.17 ஆம் திகதி நடைபெற்ற சபை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மான இல:- 16/2025.07.17 இன் பிரகாரம் சட்டநடவடிக்கை மேற்கொள்ள தீர்மானித்த போது 2025/Note to Cabinet/J/L/16 ஆம் இலக்க 2025.06.23 ஆம் திகதிய அமைச்சரவைக்குறிப்பின் 2.2 ஆ (5) க்கு அமைய அமைக்கப்பட்ட குழுவின் சிபாரிசுகள் அடங்கிய அறிக்கை 60 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதன் பிரகாரம் இது தொடர்பான விபரங்களை அமைச்சரவை செயலாளரிடம் கோருவதெனவும் 14 நாட்களினுள் விபரங்கள் கிடைக்காத பட்சத்தில் மாதாந்த சபை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மான இல:- 16/2025.07.17 ன் பிரகாரம் நிறைவேற்றுவது என கௌரவ தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்கள் வழிமொழிய சபையின் அனைத்து கௌரவ உறுப்பினர்களும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

➢ கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் வீடுகளில் நடைபெறும் குழு வகுப்புக்கள் பாதுகாப்பு இல்லாமலும் போதிய வெளிச்சங்கள் இன்மையாகவும் காணப்படுகின்றன எனவும் அங்கு சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படுவதில்லை என்றும் 6.00 மணிக்கு பிறகு நடைபெறும் வகுப்புக்களால் பெற்றோர்கள் பல இன்னல்களை சந்திக்க நேரிடுகின்றது. இதனால் அவ் வகுப்புக்களை நடாத்துவதற்கு தடைவிதிப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளவேண்டும் எனவும் கூறினார்.
  - கௌரவ உறுப்பினர் மனோகரராசா அவர்கள் காலையில் தனியார் வகுப்புக்கள் நடைபெறுவதனால் பிள்ளைகள் பாடசாலைக்கு வந்து பாடவேளைகளில் நித்திரை செய்கின்றார்கள் எனவும் தெரிவித்தார்.

**தீர்மான இல :- 16/2025.10.16**

வலிகாமம் வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் நடைபெறும் தனியார் கல்வி நிறுவன வகுப்புகளும் மற்றும் குழு வகுப்புக்களும் மாலை 6.00 மணிக்கு பின் இயங்குவதை நிறுத்துவதற்கு அனுமதி வழங்குவதென ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்கள் சில பாடசாலையில் சில பாடங்களுக்கு ஆசிரியர்கள் இன்மையினால் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு செல்லவேண்டிய நிலை ஏற்படுகின்றது எனத் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் வலிகாம வலயத்தில் மேலதிக ஆசிரியர்கள் தான் உள்ளார்கள் எனவும் பாட ரீதியாக ஆசிரியர்கள் இல்லாமல் இருக்கலாம் எனவும் அவ்வாறான பிரச்சினைகள் இருந்தால் அதனை தெரியப்படுத்தினால் உரிய திணைக்களத்துடன் கலந்தாலோசித்து அதனை சீர்செய்யலாம் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் கந்தசாமி ஜெயரூபமூர்த்தி பொன் பரமானந்தா வித்தியாலய நிர்வாகத்தினர் குட்டியப்புலம் மாணவர்களை பஸ் மூலம் ஏற்றியிறக்குவதாகவும் இதன் காரணமாக குட்டியப்புலம் பாடசாலையில் மாணவர்களின் வரவு குறைவாக காணப்படுவதாக தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் சந்திரன் தயானி அவர்கள் தனியார் முன்பள்ளிகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அரச முன்பள்ளிகளுக்கு வழங்கப்படும் வளங்கள் வீணாக்கப்படுகின்றது எனவும் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் தனியார் முன்பள்ளிகளை நிறுத்தமுடியாது எனவும் அவர்களிடம் போதிய வளங்கள் இருக்கின்றனவா என அவதானித்து ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்வோம் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் தேவச்சந்திரன் வஜிந்தன் அவர்கள் தற்போது மாணவர்களிடையே ஆன்மீக ஈடுபாடுகள் குறைவாக காணப்படுகின்றது எனவும் சிவராத்திரி மற்றும் ஆடி அமாவாசை போன்ற சமய நாட்களில் தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்காது விடுமுறை வழங்கவேண்டும் எனத் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் காணப்படும் தனியார் கல்வி நிலையங்களை அழைத்து கலந்துரையாடி அதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு

ஒரு குழு அமைத்து அவர்களை கண்காணிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வோம் எனத் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் அவர்கள் எல்லா வட்டாரத்திலும் கோயில்கள் மற்றும் சனசமூக நிலையங்கள் நல்ல நிலைகளில் உள்ளன. அவர்களின் உதவியுடன் ஒரு வட்டாரத்தில் 2 அறநெறிப் பாடசாலைகள் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் செய்தல் வேண்டும் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் துறைராஜா காளிதாஸ் அவர்கள் மாவைகலட்டியில் 3 வருடத்திற்கு மேலாக 150 க்கும் மேற்பட்ட மாணவர்களுடன் மிகவும் ஒழுங்கான முறையில் அறநெறி பாடசாலை இயங்கி வருகின்றது என்றும் அம் மாணவர்களுக்கான சீருடைகள் சபையினால் வழங்கமுடியுமா என்றும் மற்றும் மாவைகலட்டியிலுள்ள கணேசா முன்பள்ளி சிறுவர் பூங்கா பழுதடைந்துள்ளது சபை மூலம் புனரமைப்புச் செய்யலாமா எனக் கேட்டார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் அறநெறி பாடசாலைக்குரிய கட்டடம் கட்டப்படுகின்றதென்றும் அக்கட்டடம் கட்டுபவரே சீருடையினையும் வழங்குவார் எனத் தெரிவித்தார். கணேசா முன்பள்ளியின் சிறுவர் பூங்கா ஆதனம் பிரதேசசபைக்குரியதா என ஆராய்ந்து அதற்குரிய தொடர்நடவடிக்கையினை மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் சுகீர்த்தனா ரவிச்சந்திரன் அவர்கள் 13 வருடமாக அறநெறி பாடசாலை பொறுப்பாசிரியராக கடமையாற்றுகின்றேன் என்றும் ஆனால் மாணவர்களின் பெற்றோர்களிடமிருந்து முறைப்பாடாக அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் தகுதியானவர்கள் இல்லை என்றும் கல்வித்தகைமைகள் போதாது என்றும் மாணவர்களை அறநெறி பாடசாலைக்கு அனுப்புவதில் பின்னடிக்கின்றார்கள் என்றும் கிராமத்து முன்பள்ளியில் உள்ள மாணவர்கள் செயல்திறன்கூடிய மாணவர்களாக உள்ளார்கள் ஆனால் பெற்றோர் தனியார் முன்பள்ளிகளை தான் விரும்புகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

➢ 2025.10.01ம் திகதி பத்திரிகையில் பிரசுரித்தமைக்கமைவாக பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட ஏலவிற்பனைகுழு
01. கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன்
02. திரு.சந்திரதாஸ் தர்சிந்தன் தொழில்நுட்ப உத்தியோகத்தர்
03. திரு. நாகராசா குமணன் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்
ஏல விற்பனைக்குழு மூலம் 15.10.2025 ஏல விற்பனைப் செய்யப்பட்ட பொருட்கள் விபரம்

| பொருள் விபரம் | **SIZE** | பொருட்களின் எண்ணிக்கை | தீர்மானிக் கப்பட்ட பொருளின் விலை | 1ஆம் கோரல் | 2ஆம் கோரல் | 3ஆம் கோரல் | 4ஆம் கோரல் | 5ஆம் கோரல் | 6ஆம் கோரல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| TYRE- CEAT | 900*20 | 05 | | | | | | | |
| TYRE- CEAT | 8.25-20 | 02 | | | | | | | |
| TYRE- CEAT | 825-16 | 02 | | | | | | | |
| TYRE- CEAT | 750-16 | 04 | | | | | | | |
| TYRE- CEAT | 300-18 | 01 | | | | | | | |
| TYRE- CEAT | 12.04/11.28 | 02 | | | | | | | |
| TYRE- CEAT | 215/75815 | 02 | 50,000.00 | | | | | | |
| TYRE- CEAT | 750*16 | 03 | | | | | | | |
| TYRE- CEAT | 300*17 | 01 | | | | | | | |
| TYRE- CEAT | 12.4/11*28 | 02 | | | | | | | |
| TYRE- CEAT | 8.25-20 | 04 | | | | | | | |
| TYRE- CEAT | 8.25-20 | 04 | | | | | | | |
| TYRE- Bridstone | 265/70/16 1225 | 04 | | | | | | | |
| TAR BARRLE | | 100 | 500.00 | | | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெட்டப்பட்ட மரங்கள் | | | 25,000.00 | | | | | | |
| NEWS PAPER | | 325 kg | 35.00 | | | | | | |

*ஏலவிற்பனையினால் கிடைக்கப்பெற்ற வருமானம் ரூபா 137,800.00 ஆகும்.*

மேற்படி ஏல விற்பனைக்கு மற்றும் குழுவிற்கான சபையின் தழுவு அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 17/2025.10.16**

*2025.10.01ம் திகதி பத்திரிகையில் பிரசுரித்தமைக்கமைவாக பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட ஏலவிற்பனைகுழு*

01. கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன்
02. திரு.சந்திரதாஸ் தர்சிந்தன் தொழில்நுட்ப உத்தியோகத்தர்
03. திரு. நாகராசா குமணன் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்

*ஏல விற்பனைக்குழு மூலம் 15.10.2025 ஏல விற்பனைப் செய்யப்பட்ட பொருட்கள் விபரம்*

| பொருள் விபரம் | SIZE | பொருட்களின் எண்ணிக்கை | தீர்மானிக்கப்பட்ட பொருளின் விலை | 1ஆம் கோரல் | 2ஆம் கோரல் | 3ஆம் கோரல் | 4ஆம் கோரல் | 5ஆம் கோரல் | 6ஆம் கோரல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| TYRE- CEAT | 900*20 | 05 | | | | | | | |
| TYRE- CEAT | 8.25-20 | 02 | | | | | | | |
| TYRE- CEAT | 825-16 | 02 | | | | | | | |
| TYRE- CEAT | 750-16 | 04 | | | | | | | |
| TYRE- CEAT | 300-18 | 01 | | | | | | | |
| TYRE- CEAT | 12.04/11.28 | 02 | | | | | | | |
| TYRE- CEAT | 215/75815 | 02 | 50,000.00 | | | | | | |
| TYRE- CEAT | 750*16 | 03 | | | | | | | |
| TYRE- CEAT | 300*17 | 01 | | | | | | | |
| TYRE- CEAT | 12.4/11*28 | 02 | | | | | | | |
| TYRE- CEAT | 8.25-20 | 04 | | | | | | | |
| TYRE- CEAT | 8.25-20 | 04 | | | | | | | |
| TYRE- Bridstone | 265/70/16 1225 | 04 | | | | | | | |
| TAR BARRLE | | 100 | 500.00 | | | | | | |
| வெட்டப்பட்ட மரங்கள் | | | 25,000.00 | | | | | | |
| NEWS PAPER | | 325 kg | 35.00 | | | | | | |

*ஏலவிற்பனையினால் கிடைக்கப்பெற்ற வருமானம் ரூபா 137,800.00 ஆகும்.*

மேற்படி ஏல விற்பனைக்கு மற்றும் குழுவிற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் ஜெகதீஸ்வரி சுதர்சன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ✓ சிறிய அனிக்கிலீஸ் பிறேம்ஸ்ரலன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்தின் உள்ளக வீதியும், தகனசாலையும் பழுதடைந்து காணப்படுகின்றது . குறித்த மயானத்தை புனரமைக்கப்பட வேண்டுமென்ற பிரேரணை தொடர்பாக இக் கூட்டத்தின் ஆரம்பத்தில் குறித்த விடயம் தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என கௌரவ தவிசாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.
- கௌரவ உறுப்பினர் சிறிய அனிக்கிலீஸ் பிறேம்ஸ்ரலன் அவர்கள் வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்களின் விபரம் வழங்கியிருந்தேன் என்றும் அவர்களுக்கு மலசலகூட வசதிகள் செய்து கொடுக்கவேண்டிய தேவைப்பாடுகள் உள்ளன எனவும் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர் விபரம் மற்றும் ஏனைய கௌரவ உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர் விபரம் உள்ளது என்றும் அதனை

களப் பரிசோதனை செய்து கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலாரிடமிருந்து உறுதிப்படுத்தலினைப் பெற்று பயனாளிகள் தெரிவு செய்யப்படுவார்கள் எனத் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் சிறிய அனிக்கிலீஸ் பிறேம்ஸ்ரலன் அவர்கள் வலிகாமம் வடக்கில் எத்தனை நுண்நிதி கடன் நிறுவனங்கள் இயங்குகின்றது என்றும் அதில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் எத்தனை என்றும் அதன் விபரங்களை கோரியிருந்தேன் என்று தெரிவித்தார். அலுக்கை சந்தியில் இருக்கும் ஒருவர் ரூபா 100,000.00 க்கு 2 மாதத்திற்கு ஒரு நாளைக்கு ரூபா 2,000.00 படி அறவீடு மேற்கொள்ளப்படுகின்றது என்றும் தெரிவித்தார்.

  கௌரவ தவிசாளர் அவர்கள் அடுத்த கூட்டத்தில் நுண்கடன் நிதி நிறுவனங்களின் விபரங்கள் பெற்றுத் தரப்படும் என்றும் கடன் வழங்கும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதனை அவதானித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

  கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மல்லாகம் பகுதியில் இருக்கும் விவசாயிகளின் பாவனைக்கு நீர் போதாமையினால் கமநல சேவை திணைக்களத்திற்கு சொந்தமான கும்பலைக்குளத்தினை ஆழமாக்குவதற்கு கமநல சேவை திணைக்களத்திற்கு கோரிக்கையினை சமர்ப்பிக்க வேண்டுமென்ற பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

  கௌரவ தவிசாளர் அவர்கள் ஏற்கனவே கௌரவ உறுப்பினர் சிறிய அனிக்கிலீஸ் பிறேம்ஸ்ரலன் அவர்களின் கோரிக்கைக்கமைய எங்களாலும் உள்ளூராட்சி உதவி ஆணையாளராலும் நேரடியாக பார்வையிடப்பட்டது. அடுத்த வருடத்தில் உரிய அனுமதிகளினை பெற்று குளங்களை புனரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

✓ கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கும்பலைக்குளத்திற்கு வெள்ளநீர் செல்லும் வாய்க்காலில், நீதிமன்றத்திற்கு முன்னால் காணப்படும் இடத்தில் (வாய்க்கால்) மழைகாலங்களில் வெள்ளநீர் ஓட முடியாமல் இருப்பதனால் அதன் அருகிலுள்ள வீட்டு வளவுகளுக்கும் மழை நீர் செல்கிறது. ஆகவே அவ் வாய்க்காலினை அகலமாக்கி புனரமைப்புச் செய்யப்பட வேண்டுமென்ற பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்கள் தனது பிரேரணை தொடர்பாக மழை காலங்களில் வெள்ளநீர் ஓடாமல் குளமங்காலிலுள்ள வீடுகளுக்குள் செல்கிறது எனத் தெரிவித்தார்.

  கௌரவ தவிசாளர் அவர்கள் அடுத்த வருட வரவுசெலவு திட்டத்தில் இவ் வாய்க்காலினை புனரமைப்புச் செய்யலாம் எனத் தெரிவித்தார்.

**தீர்மான இல :- 18/2025.10.16**

கும்பலைக்குளத்திற்கு வெள்ளநீர் செல்லும் வாய்க்காலில், நீதிமன்றத்திற்கு முன்னால் காணப்படும் இடத்தில் (வாய்க்கால்) மழைகாலங்களில் வெள்ளநீர் ஓட முடியாமல் இருப்பதனால் அவ் வாய்க்காலினை அகலமாக்கி புனரமைப்புச் செய்வதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கருணாகரன் கஜகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

✓ கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்களால் பாதுகாப்பு தரப்பினரால் மேற்கொள்ளப்படும் அனுமதியற்ற வியாபார நிலையங்களினை நிறுத்துதல் என்ற பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

- வியாபார நிலையங்களினை நடாத்துவதென்றால் பிரதேசசபையிடம் அனுமதியினைப் பெற்று நடாத்த வேண்டும் என்று கடிதம் அனுப்பி தொடர் நடவடிக்கையினை மேற்கொள்வோம் என கௌரவ தவிசாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

✓ கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட தனியார் காணிகளை விடுவித்து மக்களின் மீள்குடியேற்றம் விவசாய நடவடிக்கைகள் போன்றவற்றை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்ற பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்கள் இராணுவத்தினர் தனியார் காணிகளில் விவசாயம் செய்து குறைந்த விலையில் விவசாய உற்பத்தி பொருட்களினை விற்பனை செய்கின்றார்கள் அவர்களுக்கு காணி வாடகை இல்லை, மின்சார கட்டணம் இல்லை அதனால் குறைத்து விற்பனை செய்கிறார்கள். மாலை நேரங்களில் சோளன் பொத்திகளும் வீதியில் வைத்து விற்பனை செய்கிறார்கள் என கூறினார். மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

**தீர்மான இல :- 19/2025.10.16**
வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் பாதுகாப்பு தரப்பினரால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்ட தனியார் காணிகளை விடுவித்து மக்களை மீள் குடியேற்றம் மற்றும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இத் தீர்மானத்தினை ஜனாதிபதிக்கு கடித மூலம் அனுப்ப வேண்டுமென சபையால் தீர்மானிக்கப்பட்டது.

- கௌரவ தவிசாளர் அவர்கள் கடற்படையினரின் தேவைக்காக கீரிமலையில் காணி சுவீகரிப்பதற்கான முயற்சியானது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றும் அக்காணிகளை ஏற்கனவே விடுவிப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டாலும் தற்பொழுது கடற்படையினரின் தேவைக்காக 2ஏக்கர் காணி கீரிமலையில் சுவீகரிப்பதற்கான முயற்சியில் காணிச்சட்டத்திற்கமைவாக அறிவித்தல் தெல்லிப்பளை பிரதேச செயலாளரினால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் சபையின் 2ம் வட்டார கௌரவ உறுப்பினராலும் சபைக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனவும் கௌரவ தவிசாளர் அவர்கள் தெரிவித்தார். ஆகவே மக்களுடைய காணி மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் தீர்மானத்தை நிறைவேற்றி பிரதேச செயலாளருக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் எனவும் தவிசாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.
- கௌரவ உறுப்பினர் சுரேகா கோகுலன் அவர்கள் கடல் மூலம் போதைப்பொருள் கொண்டு வருவதை தடுப்பதற்காக கண்காணிப்பு ரேடார் அமைப்பதற்கு கடற்படையினரின் தேவைக்காக காணியை சுவீகரிக்கின்றார்கள் என்று தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் கண்காணிப்பு ரேடார் அமைப்பதற்கு 02 ஏக்கர் காணி தேவையில்லை என்றும் அக்காணி துறைமுக பாதுகாப்புக்குதான் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

**தீர்மான இல :- 20/2025.10.16**
கீரிமலையில் உள்ள தனியார் காணியினை கடற்படையினரின் தேவைக்காக சுவீகரிப்பது நிறுத்தப்படல் வேண்டும் என கௌரவ உறுப்பினர் தர்மலிங்கம் முரளிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் ரொசாந்தகுமார் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இத் தீர்மானத்தினை பிரதேச செயலாளர் வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்திற்கு கடித மூலம் அனுப்ப வேண்டுமென சபையால் தீர்மானிக்கப்பட்டது.

- சபை நிதி – 2025, 2023ம் ஆண்டு அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் மேற்கொள்ளப்படவுள்ள பின்வரும் வேலைத்திட்டங்களிற்கான கேள்வி கோரல் மூலம் பின்வரும் ஒப்பந்தகாரருக்கு வேலையினை வழங்கியமைக்காக சபையின் தழுவு அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

| Council Fund - Stage III | | | | | |
|---|---|---|---|---|---|
| **S.No** | **Name of the work Item** | **Date of commencement** | **Date of completion** | **Contract Amount Mn** | **Name and address of the Contractor** |
| 1 | Reconstruction of Appachipillai Concrete Road Stage I at Alaveddy South | 09.10.2025 | 08.12.2025 | 4.725 | Icon Engineering Construction, Karaveddy |
| 2 | Construction of Kankesanthurai Cemetery Road | 09.10.2025 | 08.12.2025 | 3.027 | Tharun Construction, Puttur |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | Reconstruction of Kiddangi Road at Tellippalai | 09.10.2025 | 08.12.2025 | 4.297 | Tharun Construction, Puttur |
| 4 | Reconstruction of Chemponvaykal Cemetery Road at Keerimalai | 09.10.2025 | 08.12.2025 | 2.589 | Jana Civil Engineering Construction, Tellippalai |
| 5 | Construction of Boundry Wall at Kankesanthurai Office | 20.10.2025 | 18.01.2026 | 6.154 | Barun Construction, Puttur |
| 6 | **Pakage-I**<br>1. Reconstruction of the Hume Pipe Culverts & Retaining Wall at Poothavarayar Temple Road at Myliddy<br>2. Construction of Boundary Wall at Palaly South Vasavilan Hindu Cemetry<br>3. Construction of Boundry Wall at Kadduvan Playground | 09.10.2025 | 07.01.2026 | 4.822 | Kobi Construction, Neervely North, Neervely |

***தீர்மான இல :-* 21/2025.10.16**

*சபை நிதி – 2025, 2023ம் ஆண்டு அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் மேற்கொள்ளப்படவுள்ள பின்வரும் வேலைத்திட்டங்களிற்கான கேள்வி கோரல் மூலம் பின்வரும் ஒப்பந்தகாரருக்கு வேலையை வழங்கியமைக்காக தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் ரொசாந்தகுமார் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் தர்மலிங்கம் முரளிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

# Council Fund - Stage III

| S.No | Name of the work Item | Date of commencement | Date of completion | Contract Amount Mn | Name and address of the Contractor |
|---|---|---|---|---|---|
| 1 | Reconstruction of Appachipillai Concrete Road Stage I at Alaveddy South | 09.10.2025 | 08.12.2025 | 4.725 | Icon Engineering Construction, Karaveddy |
| 2 | Construction of Kankesanthurai Cemetery Road | 09.10.2025 | 08.12.2025 | 3.027 | Tharun Construction, Puttur |
| 3 | Reconstruction of Kiddangi Road at Tellippalai | 09.10.2025 | 08.12.2025 | 4.297 | Tharun Construction, Puttur |
| 4 | Reconstruction of Chemponvaykal Cemetery Road at Keerimalai | 09.10.2025 | 08.12.2025 | 2.589 | Jana Civil Engineering Construction, Tellippalai |
| 5 | Construction of Boundry Wall at Kankesanthurai Office | 20.10.2025 | 18.01.2026 | 6.154 | Barun Construction, Puttur |
| 6 | **Pakage-I**<br>1. Reconstruction of the Hume Pipe Culverts & Retaining Wall at Poothavarayar Temple Road at Myliddy<br>2. Construction of Boundary Wall at Palaly South Vasavilan Hindu Cemetry<br>3. Construction of Boundry Wall at Kadduvan Playground | 09.10.2025 | 07.01.2026 | 4.822 | Kobi Construction, Neervely North, Neervely |

✓ கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்களால் ஊடகவியலாளர்களை சபைக்கு அனுமதித்தல் தொடர்பான பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

- கௌரவ தவிசாளர் அவர்கள் ஆரம்பத்திலிருந்தே நடைமுறையில் உள்ளது எனவும் ஊடகவியலாளர்கள் தங்களை உறுதிப்படுத்தி அனுமதி பெற்ற பின்னரே சபைக்கூட்டத்திற்கு வருகை தரலாம் என்று தெரிவித்தார்.

- ✓ கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்களால் தையிட்டி சட்டவிரோத விகாரையின் கட்டுமானத்தில் சட்டத்திற்கு முரணான விதத்தில் பல புதிய கட்டுமானங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்றும் சபையின் அதிகாரங்களைப் பயன்படுத்தி புதிய கட்டுமானங்கள் கட்டுவதனை நிறுத்த வேண்டுமென்ற பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.
- கௌரவ தவிசாளர் அவர்கள் முன்னர் கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்களது முறைப்பாட்டிற்கமைய ஆறுமுகம் பத்மநாதன் அவர்களின் காணியில் கட்டடம் கட்டுவதை நிறுத்துமாறு கடிதம் அனுப்பியிருந்தும் தொடர்ந்தும் வேறு கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருவதனால் அதனை நிறுத்துமாறும் தீர்மானத்தினை மேற்கொள்வோம் எனத் தெரிவித்தார்.

***தீர்மான இல :- 22/2025.10.16***

தையிட்டி சட்டவிரோத கட்டுமானத்தில் சட்டத்திற்கு முரணான விதத்தில் பல புதிய கட்டுமானங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்றும் பிரதேச சபையின் அதிகாரங்களை பயன்படுத்தி புதிய கட்டுமானங்கள் கட்டுவது நிறுத்தப்பட வேண்டும் மற்றும் இதற்கான தீர்வினை துரிதப்படுத்துவதற்கு தேவையான அழுத்தங்களை பிரயோகிப்பதற்கும் அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ✓ கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட வலி நிறைந்த வலி வடக்கு பிரதேசத்தில் போர்க்காலத்தில் எமது சொத்துடைமைகள் அழிக்கப்பட்டதன் நினைவாக மற்றும் இற்றைவரை இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நில ஆக்கிரமிப்புகள் மற்றும் இராணுவ பௌத்த மயமாக்கல்களுக்கு எதிராக நினைவுத்தூபி ஒன்றினை பொது இடத்தில் நிர்மாணிக்க சபையின் அனுமதிக்கான பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.
- கௌரவ தவிசாளர் அவர்கள் இதனை அமைப்பதற்கு பொது இடத்தினை தாங்கள் தெரிவு செய்த பின்னர் சபையின் அனுமதிக்கு சமர்ப்பிக்குமாறும் சபைக்குரிய காணிகளில் அமைக்க இயலாது எனவும் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் ஐயாத்துரை மதூசன் அவர்கள் வலி தெற்கு பிரதேச சபையால் நடாத்தப்படும் துடுப்பாட்ட போட்டிக்கு செல்வதற்காக கௌரவ தவிசாளர் அவர்களின் அனுமதியினை பெற்று மதியம் 12.00 மணிக்கு கூட்ட மண்டபத்தினை விட்டு வெளியேறினார்.

- ➢ அடுத்து 2025.10.13ம் திகதி நடைபெற்ற தொழில்நுட்ப சேவைக் குழு கூட்ட அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்பட்டது.
- ➢ திருமதி.ம.குணசாந்தினி தொழில்நுட்பகுழு செயலாளர் பதவியிலிருந்து விலகுவதாக சபைச் செயலாளருக்கு வழங்கப்பட்ட கடிதம் கௌரவ தவிசாளர் அவர்களால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.
  - கௌரவ தவிசாளர் அவர்கள் சபையின் நிலையியற் குழுக்கள் ஆலோசனை வழங்கலாமே தவிர குழுக்களால் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட முடியாது என்று தெரிவித்தார்.
  - கௌரவ தவிசாளர் அவர்கள் குழுக்களுக்குரிய சட்ட வரையறை சொல்லப்படவில்லை எனத் தெரிவித்தார்.
  - கௌரவ தவிசாளர் அவர்கள் காணி உரிமைத்துவத்தினை பரீசீலனை செய்வது வருமானப் பரிசோதகரின் கடமையாகும் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தொழில்நுட்ப ரீதியான அமைவுகள் மற்றும் அனுமதி பெறப்படாத கட்டங்கள் தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்து விபரங்கள் சமர்ப்பிப்பது ஆகும்.
  - கௌரவ உறுப்பினர் சிவசுப்பிரமணியம் சீத்தா அவர்கள் காங்கேசன்துறையிலுள்ள ஊராவில் வளைவு அனுமதி எடுத்து கட்டப்பட்டதா எனக் கேட்டார்.
    கௌரவ தவிசாளர் அவர்கள் அவ் வளைவு அனுமதி பெற்று கட்டப்பட்டது எனத் தெரிவித்தார்.
  - கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் அவர்கள் அலுக்கை சந்தி வளைவிலுள்ள காணியில் உள்ள கட்டடம் அனுமதி பெறப்பட்டதா எனக் கேட்டார்.
  - கௌரவ தவிசாளர் அவர்கள் தற்போது அவ் வளைவிலுள்ள கட்டடம் தொடர்பாக வழக்கு நீதிமன்றத்திலுள்ளதால் நீதிமன்றம் அது தொடர்பான ஒழுங்கு முறையினை மேற்கொள்ளும் எனத் தெரிவித்தார்.

***தீர்மான இல :- 23/2025.10.16***

வலிகாமம் வடக்கு பிரதேசசபைக்குட்பட்ட காங்கேசன்துறை கடற்கரைப்பகுதியில் இராணுவத்தால் நிர்வகிக்கப்படும் வாகனத்தரிப்பிடத்தினை பிரதேசசபைக்கு கையளிக்குமாறும்

வாகனத்தரிப்பிடங்களை ஒழுங்குபடுத்துவது உள்ளூராட்சி மன்றங்களின் கடமையாதலால் குறித்த வாகனத்தரிப்பிடத்தை கையளிக்க கோருவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
இத் தீர்மானத்தினை இராணுவ தளபதிக்கும், மாவட்ட செயலருக்கும், பிரதேச செயலருக்கும் கடித மூலம் அனுப்ப வேண்டுமென சபையால் தீர்மானிக்கப்பட்டது.

➢ அடுத்து 2025.10.14ம் திகதி நடைபெற்ற சுற்றாடலும் பொது வசதிகளும் குழு கூட்ட அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்பட்டது.

- கௌரவ உறுப்பினர்களால் கீரிமலை அம்மாச்சி உணவகத்தில் நடைபெறும் பிரச்சினைகள் மற்றும் சுகாதார சீரழிவுகள் போன்ற முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.
- கௌரவ உறுப்பினர்களான மேகலா திருஞானசம்பந்தர், இராசேந்திரம் மிதுஷன், தேவச்சந்திரன் வஜிந்தன் ஆகியோர் அம்மாச்சி உணவகமானது சுகாதார முறைப்படி இயங்குவதில்லை என்றும் அதனை ஒழுங்குபடுத்தி முறைப்படி இயங்குவதற்கு ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவித்தார்கள்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் பொதுச்சுகாதார பரிசோதகரினை கொண்டு அம்மாச்சி உணவகத்தினை கண்காணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் கீரிமலையில் அம்மாச்சி உணவகம், தீர்த்தக் கேணி மற்றும் அந்தியேட்டி மடம் போன்றவற்றை உரிய முறைப்படி கண்காணித்து அதனை ஒழுங்குபடுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.
- அனைத்து கௌரவ உறுப்பினர்களாலும் வீதி விளக்குகள் பொருத்துவது சம்பந்தமாக ஒரு ஒழுங்கு முறைப்படி பொருத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.
- கௌரவ தவிசாளர் அவர்கள் நாளையிலிருந்து திகதி ஒழுங்கு முறைப்படி ( 17.11.2025 – 17ம் வட்டாரம்) வீதி விளக்குகள் பொருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

❖ கௌரவ உறுப்பினர்களான வித்தியா கிருபாகரன், சுகீர்த்தனா ரவிச்சந்திரன் அவர்கள் வலி தெற்கு பிரதேச சபையால் நடாத்தப்படும் துடுப்பாட்ட போட்டிக்கு செல்வதற்காக கௌரவ தவிசாளர் அவர்களின் அனுமதியினைப் பெற்று மதியம் 12.40 மணிக்கு கூட்ட மண்டபத்தினை விட்டு வெளியேறினார்கள்.

- கௌரவ உறுப்பினர் துறைராஜா காளிதாஸ் அவர்கள் மாவைகலட்டியில் 3வீதிகள் புனரமைப்பு செய்யப்படவுள்ளன. அவ்வீதிகளுக்கான சமூகமட்ட கண்காணிப்பு குழு அமைப்பதற்கு மக்களை சமூகமளிக்குமாறு பிரதேசசபையினரால் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் எனக்கு இதுவரை அறிவித்தல் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.
  கௌரவ தவிசாளர் அவர்கள் கௌரவ உறுப்பினர் தாங்கள் அக் குழுவில் உறுப்பினராக இருக்க இயலாது என்றும் வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் தங்களுக்கு தெரியப்படுத்தப்படும் எனவும் இன்று நடைபெறும் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு தெரிவித்தார்.

❖ கௌரவ உறுப்பினர்களான சுரேகா கோகுலன், ஜெகதீஸ்வரி சுதர்சன் அவர்கள் தவிசாளர் அவர்களின் அனுமதியுடன் மதியம் 12.50 மணிக்கு கூட்ட மண்டபத்தினை விட்டு வெளியேறினார்கள்.

➢ அடுத்து 2025.10.07ம் திகதி நடைபெற்ற வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்திக் குழு கூட்ட அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்பட்டது.

- கௌரவ தவிசாளர் அவர்கள் வித்தகபுரம் கிளினிக் நிலையம் துப்பரவு செய்வதற்கு நடவடிக்கையினை மேற்கொள்வோம் எனத் தெரிவித்தார். ஆனால் சபைக்குரிய ஆதனம் இல்லாத காரணத்தினால் புனரமைப்புச் செய்ய இயலாது எனத் தெரிவித்தார்
- கௌரவ உறுப்பினர் கருணாகரன் கஜகரன் அவர்கள் திருப்பூர் மயிலிட்டி பேச்சியம்மன் கோயில் கும்பாபிஷேகத்திற்காக அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டகை இன்னும் அகற்றப்படவில்லை எனத் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் அக்கொட்டகை ஆரம்பத்திலிருந்தே அவ்விடத்திலுள்ளது எனத் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் கந்தசாமி ஜெயரூபமூர்த்தி அவர்கள் வசாவிளான் பாடசாலைக்கு அருகில் பஸ்தரிப்பிடம் நிர்மாணிப்பதற்கு அனுமதி பெற்றுத் தருமாறும், பிள்ளையான்காடு மயானத்தில் நடுவதற்காக 20 தென்னம்பிள்ளை தந்துள்ளார்கள் என்றும் மயானத்தில் பற்றைகள் , கற்கள் அதிளவில் வளர்ந்து காணப்படுவதனாலும் மயானத்தினை துப்பரவு செய்து மரம் நடுவதற்கு JCB தந்துதவுமாறும் மயானத்தின் கற்களை மட்டப்படுத்தி தந்தால் கற்கள் உடைப்பதற்கு ஆட்கள் உள்ளதால் அதனை உடைப்பதற்கு அனுமதிதந்துதவுமாறும் கேட்டுக்கொண்டார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் பஸ்தரிப்பிடம் அமைப்பதற்கான இடம் மற்றும் வரைபடம் என்பவற்றினை சமர்ப்பிக்குமாறு தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் அவர்கள் போக்குவரத்து பேரூந்துகளான 769 மக்களின் நலன் கருதி ஒன்று விட்ட ஒரு முறையாவது பலாலியிலிருந்து புறப்படுவதற்கு ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் உரிய தரப்பினருடன் கதைத்து ஒழுங்குகளை மேற்கொள்வோம் என்று தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் சிறிய அனிக்கிலீஸ் பிறேம்ஸ்ரலன் அவர்கள் கோயில் திருவிழாக்காலங்களில் வீதிகளில் கட்டப்படும் அலங்காரக்கயிறுகள் திருவிழா நிறைவு பெற்றதும் அகற்றப்படல் வேண்டும் என்றும் அகற்றப்படாமல் இருப்பதனால் போக்குவரத்து செய்பவர்களுக்கு விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளது எனத் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் அகற்றுவதற்கு நடவடிக்கையினை மேற்கொள்வோம் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் கந்தசாமி மனோகரராசா அவர்கள் பொதுக்கிணறுகள் பயன்படாமல் மாசடைந்து மணம் வீசுவதாக தெரிவித்தார்.

  கௌரவ தவிசாளர் அவர்கள் அவ்வாறான பொதுக்கிணறுகளின் விபரங்களை தரும் பட்சத்தில் அவ் விபரங்களினை பிரதேச செயலகத்திற்கு வழங்குவதன் மூலம் அவர்கள் அதனை புனரமைப்பதற்கு நடவடிக்கையினை மேற்கொள்வார்கள் எனத் தெரிவித்தார்.

இத்துடன் கூட்டமானது மதியம் 01.11 மணிக்கு இனிதே நிறைவு பெற்றது.

ஒப்பம்: **சி.சிவானந்தன்**
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
காங்கேசன்துறை

ஒப்பம்: **சோ.சுகிர்தன்**
தவிசாளர்
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
காங்கேசன்துறை

உண்மைப்பிரதியென உறுதிப்படுத்துகின்றேன்.

**சிவகுமாரன் சிவானந்தன்**
செயலாளர்.
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
காங்கேசன்துறை